## ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில்

# மேலே நகர்ந்த சிமிந்தி மூடி சரி செய்யப்பட்டது



கோலாலம்பூர், அக். 6-

கனத்த மழை பெய்யும்போது தலைநகர், ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் உள்ள சிமிந்தி மூடி மேலே நகர்ந்த விவகாரம் சமூகவலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வந்ததைத் தொடர்ந்து இண்டா வாட்டர் நிறுவனம் அதனைச் சீர்படுத்தி விட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் கூறியது.

பல தடவை அந்த சிமிந்தி மூடி மேலே நகர்ந்த வேளையில், அது காணாமல் போனதால் அதனைச் சீர்படுத்தும் முயற்சியில் அந்நிறுவனம் இறங்கியதாக அதன் ஊடகப் பிரிவு கூறியது.

காழ்ப்புணர்ச்சி காரணமாக அச்செயல் நிகழ்ந்திருக்கலாம். நேற்று காலை இண்டா வாட்டர் நிறுவனம் அந்த சிமிந்தி மூடியை அங்கு பொருத்தியதாக அது நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.

மேற்குறிப்பிட்ட அந்த சிமிந்தி மூடி பல முறை மேல்நோக்கி நகர்ந்த 25 விநாடிகளைக் கொண்ட காணொளி கடந்த வெள்ளிக்கிழமை சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வந்தது.

கடந்த 23.8.2024ஆம் தேதி ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நிகழ்ந்த மண் உள்வாங்கிய சம்பவத்தில் இந்தியாவைச் சேர்ந்த விஜயலட்சுமி (வயது 48) காணாமல் போன சம்பவத்தைத் தொடர்ந்து இப்போது அங்குள்ள சிமிந்தி மூடி மேல்நோக்கி நகர்ந்தது மக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தி யிருந்தது.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நிகழ்ந்த இச்சம்பவத்தை பொதுமக்கள் பெரிதுப்படுத்தக் கூடாது என கோலாலம்பூர் மாநகர் மன்றம் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டது.